1994 ஏப்ரல் 5]

187--

நாகப்பட்டினத்திற்கும் அக்கரைப்பேட்டைக்கும் இடையே பாலத்தைப் புதுப்பித்தல்.

***16280-திரு. ஆர். கோடிமாரி:**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நாகப்பட்டினத்துக்கும், அக்கரைப்பேட்டைக்கும் இடையில் உள்ள பாலம் பழுதடைந்து இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அப்பாலத்தைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கடல் நீராலும், உப்பங்காற்று வீசுவதாலும் பாலத்தைத் தாங்கி நிற்கும் தூண்களில் அடிக்கடி பாதிப்பு ஏற்பட்டு வருகிறது தூண்களில் வெடிப்பு ஏற்பட்டு வருகிறது. தூண்களில் வெடிப்புகள் தோன்றுகின்றபோது குறைபாடுகள் செப்பனிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு சரி செய்யப்பட்டு வருகிறது. மேலும் பாலத்தில் பொருத்தப் பட்டுள்ள குழாய்க் கைப்பிடிகளைச் சரி செய்யும் பணிகளைச் செயல்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். கோடிமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வானமே கூரையாக, பூமியே வீடாக வாழ்ந்துவரும் மீனவ சமுதாய மக்கள் சுமார் 30 ஆயிரம் மக்கள் அந்தப் பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். மீனவ சமுதாய மக்கள் மட்டுமல்லாமல், பலதரப்பட்ட மக்களும் வசித்து வருகின்றார்கள். வருடத்திற்கு ஒரு முறை புயலின் சீற்றத்தால் பாதிக்கப்படும் அந்தப் பாலம்--கரை ஏறி மக்கள் வசிக்கின்ற மேற்குப் பகுதிக்குச் செல்ல வேண்டும் என்றால், அந்த ஒரே பாலம்தான்-. அப்படி அந்தப் பாலம் கடல் சீற்றத்தால் பழுதடைந்து இடிந்து விழுமேயானால், அந்த 30 ஆயிரம் மக்களும் அந்த மேட்டுப் பகுதிக்குச் செல்ல முடியாமல் அந்தப் பாலத்தில் விழுந்து மடிவதற்கு ஏதுவாகும். ஆகவே, இது குறித்து நான் இதற்குமுன்பு சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் பேசி இருக்கின்றேன்; டி.டி.சி மீட்டிங்கில் பேசி இருக்கிறேன்; கேள்வியும் எழுப்பி இருக்கின்றேன். அதாவது, காலம் கடந்து கொண்டிருக்கிறது. அந்த மக்களுடைய குறையை களைய என்னுடைய தெய்வமாகிய, நான் வணங்கும் தெய்வமாகிய டாக்டர் புரட்சித்

தலைவி அவர்களுடைய அரசில், இந்த நிதியாண்டில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பாலத்தைக் கட்டித் தருவார்களா என மிகவும் வருந்தி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலத்தை புதிதாகக் கட்ட வேண்டுமென்றால், ஏறத்தாழ 3 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இருக்கின்ற பிரச்சினையே அதுதான். 10 லட்சம், 15 லட்சம் என்று சொன்னால் உடனடியாக அரசு பரிசீலித்து ஏற்பாடு செய்யலாம். பெரிய அளவிலே பாலங்களைக் கட்டுகின்றபோது அதிகமான தொகைகளை அரசு ஒதுக்க வேண்டிய ஒரு நிர்பந்தம் ஏற்படுகின்றபோதுதான் உடனடியாக அவைகளை எல்லாம் செய்ய முடியாமல், அவைகளை மைய அரசினுடைய சென்ட்ரல் ரோடு ஸ்கீமிலாவது அல்லது பெரிய திட்டங்களிலாவது சேர்க்க வேண்டும் என்று சில திட்டங்களைச் சேர்த்து வருகிறோம். அந்த அடிப்படையிலேதான் இந்தப் பாலத்துக்கும் 3 கோடி ரூபாய் தேவைப்படுகின்ற காரணத்தினாலே அதை உடனடியாக எடுத்துச் செய்ய முடியாத சூழ்நிலையில், இருக்கின்ற பாலத்தைப் பராமரிக்கும் பணியை நம்முடைய நெடுஞ்சாலைத் துறையினர் மேற்கொண்டு இருக்கிறார்கள். கடல் ஓரங்களில் இருக்கின்ற நிலைகளே வேறு. அங்கே மின்கம்பங்களானாலும், பாலங்களானாலும் அடிக்கடி உப்பங்காற்று வீசுவதாலே பாதிக்கப்படுகின்றது; வெடிப்புகள் ஏற்படுகின்றது. அவைகளை அடிக்கடி சரிசெய்ய வேண்டிய சூழ்நிலையும் ஏற்படுகின்றது. அதற்காகத்தான் ஒரு புதிய சிமென்ட் உபயோகிக்க வேண்டும் என்று ஒரு தொழில் நுட்ப வல்லுனரை வைத்து, அந்தப் பகுதியிலே கட்டும் கட்டிடங்கள், பாலங்கள் ஆகியவற்றுக்கு எல்லாம் அந்த முறையை நாம் மேற்கொள்ளலாமா என்று ஆய்வு செய்து கொண்டு இருக்கிறோம். ஆகவே, அந்த அடிப்படையிலே, இனிமேல் வருங்காலத்திலே அதைச் செயல்படுத்தலாம். ஏற்கெனவே இருக்கின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, இந்தப் பாலத்தினுடைய வெடிப்புகளை அகற்றுவதற்கும், ஒட்டியுள்ள சாலைகளை மேம்படுத்துவதற்கும் ஏற்கெனவே 3.8 லட்சம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது; இந்த ஆண்டும் 7.4 லட்சம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, எப்படியும் அந்தப் பாலத்தைச் சீரமைக்கின்ற பணியை அரசு மேற்கொள்ளும் என்பதை மாத்திரம் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். கோடிமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்தப் பாலத்திற்கு முன்பு மூன்று சில்லரை

லட்சம் செலவழித்து இருப்பதாகச் சொல்கின்றார்கள். இப்போது ஏழு, சில்லரை லட்சம் செலவழிக்க இருப்பதாகச் சொல்கின்றார்கள். இப்படிப் பல முறை, பல ஆண்டுகளாக--அதாவது, இது திரு. பக்தவச்சலம், முன்னாள் அமைச்சர் காலத்தில் கட்டப்பட்ட பாலம். அந்தப் பாலத்தை அப்படியே வைத்துவிட்டு, சரியானபடி பழுது பார்க்காமல் இருந்து இருக்கிறார்கள். நமது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு வந்த பிறகு, நம்முடைய ஆட்சிக் காலத்தில்தான் அதைப் பழுது பார்த்து இருக்கின்றார்கள். என்றாலும் அது கடல் அருகில் இருப்பதனால், அதை எவ்வளவுதான் பழுதுபார்த்தாலும், அந்த எக்ஸ்பென்ஸை கூட்டிப்பார்க்கும்போது, வருடத்திற்கு 7 லட்சம், 4 லட்சம் என்று ஆகும்போது, கருணை உள்ளம் கொண்ட என்னுடைய தெய்வத்தின் அரசில், அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து, இந்த நிதி ஆண்டில் எந்த நிதி இருந்தாலும், மக்களினுடைய உயிர் காப்புக்காக இந்தப் பாலத்தைக் கட்டித் தருவார்களா என நான் மீண்டும் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலத்தை பொறுத்தவரையில் நம்முடைய ஆட்சிக் காலத்தில் பணிகள் நடைபெற்றன என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். கடலுக்கு அருகில் இருக்கிற காரணத்தால், குடுவையாறு கலக்கிற பகுதியில் இருக்கிற காரணத்தால், எப்போது பார்த்தாலும் மூன்று மீட்டர் தண்ணீர் அங்கே நின்று கொண்டிருக்கிறது. ஆகவேதான் புதிய புரபோசல் போடுகிறபோது, பெர்மனென்ட் புரபோசலாக மூன்று கோடி ரூபாய்க்கு, நல்ல அளவிலே அந்தப் பாலத்தை கட்டினால் தான் முழுமையாக செயல்பட்டதாக இருக்க முடியும் என்ற அடிப்படையில்தான், அதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இது ஒரு முக்கியமான பிரச்சினை என்பதை இந்த அரசு உணர்ந்து இருக்கிறது. அந்தப் பகுதியில் வாழ்கிற மீனவ மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுகிற வகையில் இது சம்பந்தமாக அரசு ஆய்விலே எடுத்துக்கொண்டு மிக விரைவில் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 188, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.